Scanned on 1/7/2011

# குமரி மாவட்ட செய்திகள்

கன்னியாகுமரியில் சித்த விஷ பயிற்சி கருத்தரங்கு:

## 4 விஷப்பாம்புகளுடன் வந்த சித்த வைத்தியரால் பரபரப்பு

கன்னியாகுமரி, ஜூலை.1–

சித்த விஷ பயிற்சி கருத்தரங்கில் 4 விஷப்பாம்புகளுடன் வந்த சித்த வைத்தியரால் பரபரப்பு ஏற்பட்டது.

### கருத்தரங்கு

கன்னியாகுமரி விவேகானந்த புரத்தில் உள்ள விவேகானந்த கேந்திர இயற்கை வள அபிவிருத்தி திட்டம் என்ற அமைப்பு சார்பில் அங்குள்ள கிராமோதயா பூங்காவில் மாநில அளவிலான சித்த விஷ மருத்துவ சிகிச்சை பயிற்சி கருத்தரங்கம் நேற்று நடத்தியது. இதனை மூலிகை ஆராய்ச்சியாளர் டாக்டர் வே.செல்லத்துரை தொடங்கிவைத்தார். திட்ட விரிவாக்க அலுவலர் சரஸ்வதி வரவேற்றுப்பேசினார்.

இதில் டாக்டர் வி.கணபதி, விவேகானந்த கேந்திர மூத்த ஊழியர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசினர். விஷ சம்பந்தப்பட்ட நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு சித்த விஷ முறிவு கலந்துரையாடல் மற்றும் விஷக்கடி தொடர்பான செயல்விளக்க முறைகளும் நடத்தப்பட்டது.



சித்த விஷ பயிற்சியரங்கில் பங்கேற்ற சித்த வைத்தியர் ஒருவர் பாம்பை காண்பித்து விளக்கமளித்த காட்சி.

### பாம்புடன் வந்த சித்தவைத்தியர்

நெல்லையை சேர்ந்த சாஸ்தா என்ற சித்த வைத்தியர் பாம்பு பிடிப்பதில் வல்லவர். அவர் கட்டுவிரியன், நல்லபாம்பு, கண்ணாடிவிரியன், சாரைப்பாம்பு ஆகிய 4 பாம்புகளை பையில் போட்டு கருத்தரங்கிற்கு கொண்டு வந்தார். அதை அனைவரது மத்தியிலும் காட்டி விஷம் கக்கும் முறை, கடித்தால் அதற்கு செய்யவேண்டிய சிகிச்சை ஆகியவற்றை விளக்கினார். அதன்பின்னர் அவரது சைகைக்கு ஏற்ப நல்ல பாம்பு நடனமாடியது. இதை அனைவரும் ஆச்சரியத்துடன் பார்த்து ரசித்தனர்.

### கட்டுரைகள் சமர்ப்பிப்பு

வண்டுக்கடி, சிலந்திகடி, பூரான்கடி, பாம்புகடி, தேள்கடி, எலிக்கடி, நாய்கடி உள்ளிட்ட அனைத்து விஷ கடிகளுக்கும், விஷநோய்களுக்கும், நாள்பட்ட நோய்களுக்கும் மருந்துகளின் செயல்பாடுகள் பற்றியும் பல்வேறு தலைப்புகளில் விவாதம் நடந்தது. கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி உள்பட பல பகுதிகளில் இருந்து 500–க்கும் மேற்பட்ட சித்த வைத்தியர்கள், கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை விவேகானந்த கேந்திர சித்த மருத்துவர் டாக்டர் வே.கணபதி செய்திருந்தார்.

---

இந்திய கப்

## கடியபட்
## கேப்ட

நாகர்கே
ஜூ
இந்திய கப்
தலைமை இய
உத்தரவின்பேரில்
யப்பட்டணம் க
மூழ்கிய சரக்கு
லின் கேப்டன் உ
7 பேரும் விடுவிக்
டுள்ளனர்.

### பனாமா நாட்டு க

பனாமா நாட்டை
எம்.வி.மிராஜ் என்
குமரி மாவட்டம் க
டணம் கடற்பகுதி
வந்து கொண்டிரு
29–3–2011 அன்று
மூழ்கியது. இந்த
இருந்து டீசல் போ
உறிஞ்சு கப்பல் மூல
றப்பட்டது. மேலும்
பலில் உள்ள இருப்
உள்ளிட்ட சுற்றுச்சு
பாதிப்பை ஏற்படுத்
பொருட்களை அ
தற்கான முயற்சிகள
மாவட்ட நிர்வாக
கொண்டு வருகிறது

மூழ்கிய கப்பலில்
என்ஜினீயர்கள், ஊ
உள்பட 25 பேர் வ
னர். அவர்கள் பல்வே
களைச் சேர்ந்தவ
இருந்தனர். அவர்கள
வரும் நாகர்கோவில
காப்பாக தங்க வைக்